உ

கணேசன் துணை.

சதுர்வேதமங்கலம்

# ஸ்ரீ உருத்திரகோடீஸ்வரர்

# மடக்கடிப் பதிகம்.

---

இஃது

ஷை யூர் அழகப்பனம்பலம்

அவர்கள் புத்திரன்

சேவகனம்பலகாரரது

வேண்டுகோள்கொண்டு சிங்கம்புணரி

மு. முத்துவடுகு

உபாத்தியாயரவர்களால் இயற்றியது.

இதனை

ஷை அம்பலகாரரது பொருளுபகாரங்கொண்டு

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கலாயிற்று.

1911.

115 | IV

115 | 1911

OFFICE OF THE ... REGISTERED 11 OCT 1911 MADRAS.

115

Q23:38.21195SM
N11

171038.

உ

# சிறப்புக்கவி.

இஃது

சிங்கம்புணரி

## வெ. சி. இராமசாமியால்

ஆக்கிய

நேரிசை வெண்பா.

எப்பதிக மும்மிதன்முன் னேசிறவா தேமடக்க
டிப்பதிகம் ருத்திரகோ டீஸ்வரன்மேற்—செப்பினன்
மாசிரியு முத்து வடுகனை வந்திடுமென்
ஆசிரியன் பத்திவலி யால்.

உ

ஸ்ரீ சதுர்வேதமங்கலம்.

உருத்திரகோடீஸ்வரர்

# மடக்கடிப்பதிகம்.

## விநாயகர் காப்பு.

மாசற் றிடுநன் மறையூ ருருத்திரகோ
டீசற் பதிகநய னேந்தவே—தாசருக்கின்
பந்தரத்தா ளாதவர பால கணபதியின்
சுந்தரத்தா ளாகுந் துணை. (1)

## நூல்.

சீரானைக் கண்டிகை வெண்ணீற்றிறுகுஞ்
சீரானைக் கதங்கழுவாச் சிந்தையார்முன்
வாரானைச் சென்னியில்வெண் டிரைபுரட்டும்
வாரானைத் தீட்சையினார் மனத்தைவிட்டுப்
பேரானை யுருத்திர கோடீசரென்னும்
பேரானை நால்வரணி பிறங்குதென்சொற்
றூரானை யென்பிழையுள் ளெண்ணியின்ன
றூரானை வைகலுமஞ்சலி செய்வேனே. (2)

ஒளியானைப் பாவனநெஞ்சுடையார்தேடற்
கொளியானை யயனரிமற்றும்பர்கூடுந்
துளியானை மலர்ப்பிழிமெய்ந்தினியபண்ணோ
துளியானை வறுகமலத்தாளிணைக்

OFFICE ... 11 OCT ... MADRAS
Q23:58.21195SM M11

களியானை யுரியானைமாயையானுட்
களியானை மறவினைமேற்கைத்துளார்தம்
உளியானை யினிப்பிறவியொழிப்பானெஞ்சுள்
உளியானை மலர்கொடுகண்டோங்குவேனே. (3)

ஆட்டானை யெணைப்பிணியாங்கலியுளாழ்த்தி
ஆட்டானை யோய்விலெனையந்தகன்கண்
காட்டானை யம்பரவதிபதியானை
காட்டானை யானபவங்கழித்தவெள்ளை
மாட்டானை யறத்தினெதிர்மறையார்காண
மாட்டானைப்பாணன்முனைமடித்தவீணைப்
பாட்டானை மறைமுதற்பனூல்வியக்கும்
பாட்டானைச்சுகங்கைவரப்பாடுவேனே (4)

தரத்தானை யரக்கன்முடிதம்பிகொள்ளத்
தரத்தானை யொடுபெருநீர்த்தலையினீந்த
உரத்தானை மோகினியாய்வரவணைந்த
உரத்தானை மனமலினமொழிக்குமஞ்சக்
கரத்தானை யிரசிதசிகரியதாமா
கரத்தானை விழிதுயிற்றுங்கங்குலாங்குஞ்
சரத்தானை யெரித்தானைநரந்ததாமச்
சரத்தானைப்பணிந்துபிணிதனைத்தீர்ப்பேனே. (5)

கலையானைத்தழைந்தசடைக்காட்டினானைக்
கலையானைப்புயங்கவளைக்கரன்மேற்போதன்
தலையானை முருகன்வலம்வருகுமுற்கா
தலையானை முகறகளித்தான்றன்னைமேருச்
சிலையானை நியமர்பறித்திடக்கொளும்பச்
சிலையானைத்தொண்டரைப்பார்த்திலனெனுங்க

வலையானை வாண்டூனம்வ...
வலையானைக்கண்டுசுகம்வரவா...

எட்டானை யிந்திரியவழிச்செல்வார்க...
கெட்டானை வெட்டுமனத்தியக்கர்கோனை
நட்டானைத் தன்னிருதாளெளியேனுள்ள
நட்டானைச் சிலையொடலைநடுவிற்றள்ளப்
பட்டானைப் புரந்தானைத்திரிபுரக்காப்
பட்டானை யளவைசொலப்படாதபூத
வொட்டானை யனையெனைப்புனெறிமேற்செல்ல
வொட்டானைப் பரவிநயத்துயருவேனே. (7)

நடையானைப் பரவைதன்பாற்றூதுசென்ற
நடையானை வஞ்சகவேடத்தார்நண்ணக்
கிடையானை முடிவூழிப்புனவிஞர்ப்புக்
கிடையானைப் புலைசவட்டிக்கிளரும்வைவேற்
படையானை யெனையினியோருடற்குளெய்தப்
படையானைக்காண்பொருள்கள்பலவுந்தானய்
உடையானை யரையின்மதிப்போங்குகாவி
உடையானைப் போற்றிவரமொன்றுவேனே. (8)

கல்லானை வறவிருந்தியோகஞ்செய்தானைக்
கல்லானை தினக்கரும்புகைக்கொண்டானை
நல்லானை யமுதமுடிக்கிடுவார்பங்கின்
நல்லானை யளந்தவன்சீர்கவிலற்கெல்லை
இல்லானை யுலகமயக்கிழந்தார்நெஞ்சே
இல்லானை யருச்சுனனேடிடைதழீஇச்செய்ம்
மல்லானை யொருபொழுதுமறதிவாரா
மல்லானை யமறநிதம்வாழ்த்துவேனே. (9)

...பாரெதிர்வரத்தா
...யபு வனத்துளார்தங்
...தகன்மத்தழல்வாருள்ளத்
... மகத்துறையசோகனன்பர்
...யானை யிருத்தானைவிசாரத்தென்னை
...தியானை மீட்டிகமேல்விடாதமோக்கப்
பதியானை விசரவழிப்படர்வார்க்கன்...
பதியானைத் தொழுதிருமைப்பயன்கொள்வேனே. (10)

பலத்தானைத் தவமுடையார்தமக்காம்பொன்னம்
பலத்தானைப் பூதிமணிபடையார்மேற்சஞ்
சலத்தானைச் சிற்றிளங்காறருவதாம
சலத்தானை மித்திகத்தாதரங்கொண்டானை
அலத்தானை வரைப்பொருதாவகைசெய்தான்வே
றலத்தானை யிவனேயென்றடைந்தசெம்பொற்
கலத்தானை வளத்தொடுநான்மறைப்போர்கொண்மங்
கலத்தானை வேண்டிநலங்கைக்கொள்வேனே. (11)

---

(திருச்சிற்றம்பலம்.)

ஸ்ரீ உருத்திர கோடீஸ்வரர்

...டக்கடிப்பதிகம்

முற்றுப்பெற்றது.